# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் - 01.09.2026

## முன்னிலை

### முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

### மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 5795/SCIC/2025**

Thiru M.PRATHAP, Advocate - புகார்தாரர்
No.10, 2nd Cross Street
Meenakshi Nagar West
MANGADU, CHENNAI-600 122.
Phone:86086 09294.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
குன்றத்தூர் வட்டம்
சென்னை - 600 069.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **26.08.2025** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 29.09.2025 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 18.12.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 26/08/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ Kundrathur Taluk Office, Kundrathur, Chennai-69 அவர்களுக்கு அனுப்பி, அதில் “A Copy of the Sub-division Statement form, signed by the petitioner during the field audit for the subdivision of Survey Number 26/69 is required” என்பன போன்று 9 (ஒன்பது) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இவ்வழக்கின் விசாரணை ஏற்கனவே 10/08/2026 அன்று விசாரணை மேற்கொள்ள ஆணையம் பட்டியலிட்டிருந்தது. மனுதாரர் கோரியவாறு, அன்றைய விசாரணை ஒத்திவைக்கப்பட்டு, இன்றைய விசாரணைக்கு ஆணையம் எடுத்துக் கொண்டது. இன்றைய (01/09/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.M.பிரதாப் அவர்கள்

ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திருமதி.செந்தமிழ்செல்வி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், குன்றத்தூர் வட்டம் அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 07/08/2026 தேதியிட்டு இனவாரியான தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அது தொடர்பான நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர், மேற்சொன்ன தகவல் தனக்கு கிடைக்கப் பெற்றதை ஒப்புக் கொண்டாலும், அப்பதிலின் உண்மைத் தன்மையினை ஆட்சேபித்ததோடு, தனக்கு அத்தகவல் தேவையில்லையென்றும், தனது சட்டப்பிரிவுகள் 6(1)-ன் கீழான மனு மற்றும் 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனு ஆகியவற்றிற்கு எவ்வித தகவலும் அளிக்காத பொது அதிகார அமைப்பின் மீது நடவடிக்கை எடுக்க ஆணையத்திடம் முறையிட்டார். மேலும் மனுதாரர் தெரிவிக்கையில், மேற்குறிப்பிட்டு சொத்து தனக்கும், தனது சகோதரருக்கும் உரிமையுடையது எனத் தெரிவித்தார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. மனுதாரரின், தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005, சட்டப்பிரிவுகள் 26/08/2025 தேதியிட்ட 6(1)-ன் கீழான மனு மற்றும் 19(1)-ன் கீழான 29/09/2025 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனு ஆகியவற்றிற்கு எவ்வித தகவலும் அளிக்காத, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.கார்த்திகேயன் (தற்போது தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருப்பெரும்புதூர் வட்டம்) மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் திரு.சேரந்தையன், (தற்போது கண்காணிப்பாளர், வருவாய் நிர்வாக ஆணையரகம், சென்னை-5) ஆகியோர் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மேற்சொன்ன திரு.கார்த்திகேயன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மற்றும் திரு.சேரந்தையன், கண்காணிப்பாளர் ஆகியோரிடமிருந்து காரண விளக்க கேட்பு குறிப்பாணைக்கான விளக்கத்தைப் பெற்று அதனை ஆணையத்தில் 30/09/2026 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார்.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 5795/SCIC/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
குன்றத்தூர் வட்டம்
சென்னை - 600 069.

2. திரு.கார்த்திகேயன்
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
திருப்பெரும்புதூர் வட்டம்
காஞ்சிபுரம் மாவட்டம்

3. திரு.சேரந்தையன்,
முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்
(தற்போது கண்காணிப்பாளர்,
வருவாய் நிர்வாக ஆணையரகம்,
Ezhilagam, 3rd Floor, Kamarajar Salai, Chepauk,
Chennai - 600005

**புகார்தாரர்**

Thiru M.PRATHAP, Advocate
No.10, 2nd Cross Street
Meenakshi Nagar West
MANGADU, CHENNAI-600 122.
Phone:86086 09294.

நகல்
1.மாவட்ட ஆட்சித் தலைவர்
.மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
காஞ்சிபுரம் மாவட்டம்.

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/Sr.PC